# ChildFund Sri Lanka இளைஞர்களின் ஈடுபாடு குறித்த அனுபவப் பகிர்வு

பேரழிவு ஆபத்துக் குறைப்பை அடிப்படையாகக் கொண்ட எக்கோ சிஸ்டம் (ECO DRR) முயற்சியில் இளைஞர்களின் ஈடுபாட்டைக் காண்பிப்பதற்கும், அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதற்கும் ChildFund Sri Lanka அமைப்பு, 'சுற்றுச்சூழலுக்கான இளைய தலைவர்கள் 2021' என்ற தலைப்பில் ஆய்வரங்கை நடத்தியது. இது ChildFund Korea இன் நிதியுதவியுடன் ChildFund Sri Lanka இனால் நடைமுறைப்படுத்தப்பட்ட மூன்று வருடத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்தத் திட்டம் இயற்கையைப் பாதுகாப்பதற்கான சர்வதேச ஒன்றியத்தின் (IUCN) தொழில்நுட்ப உதவியுடன் அமலானது.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்த ஆய்வரங்கில், அரசாங்கத்தின் பிரதிநிதிகள், தனியார் துறை அமைப்புகள், நடைமுறைப்படுத்தும் கூட்டாண்மை முகவர்கள் எனப் பலரின் பங்களிப்பும் வரவேற்கப்பட்டது.

இந்த ஆய்வரங்கின் நோக்கங்களாவன: பேரழிவு ஆபத்துக் குறைப்பை அடிப்படையாகக் கொண்ட எக்கோ சிஸ்டம் நடைமுறையை ஊக்கப்படுத்த ChildFund Sri Lanka எடுத்த முயற்சிகளை காட்சிப்படுத்துவது, தங்கள் முக்கிய சாதனைகளை, பரந்தளவில் உள்ளூர், சர்வதேச பார்வையாளர்களுடன் பகிர்ந்து கொள்ளும் இளைஞர்களின் முயற்சிகளுக்கு ஒரு வலுவான தளத்தை உருவாக்குவது என்பனவாகும்.

வெள்ளம், வரட்சி, நிலச்சரிவு, கடல் உள்வாங்கல் போன்றவற்றால் இலங்கை எளிதில் பாதிக்கப்படுகிறது. அனர்த்தங்கள் தொடர்பான பிரச்சினைகளை அடையாளம் காண, இளைஞர்களின் அறிவை வளர்ப்பது, நடைமுறைப்படுத்தல் என்பவற்றில் இத்திட்டம் முதலீடு செய்திருந்தது.

மட்டக்களப்பு, நுவரெலியா, முல்லைத்தீவு, புத்தளம் ஆகிய நான்கு மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

